**உள்ளூராட்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய பொது நூலகங்களில் "ஒக்டோபர் – தேசிய வாசிப்பு மாத நிகழ்ச்சித்திட்டம்" இனை நடைமுறைப்படுத்தல்.**

## 01. அறிமுகம்

2004 ஆம் ஆண்டு முதல் ஒக்டோபர் மாதத்தினை தேசிய வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்குரிய தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் முகமாக **விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்** மற்றும் **விசேடமான செயற்திட்டங்களை** நடைமுறைப்படுத்துமாறு சகல பொது நூலகங்களிடமும் கோரப்பட்டுள்ளன. **"உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே"** என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் இந்த ஆண்டு தேசிய வாசிப்பு மாத திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## 02. செயற்திட்டக் குழு

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்வதற்காக பல்வேறுப்பட்ட துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசிய வாசிப்பு மாத செயற்திட்டக்குழுவை நியமிப்பது மிகவும் பொருத்தமானது, தற்பொழுது நூலக்குழு ஒன்று காணப்படுமானால் அக் குழுவின் மூலமும் வாசகர் சமூகத்தின் ஒத்துழைப்புடன் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

- நிறுவனத்தின் தலைவர் அல்லது உப தலைவர் - குழுத் தலைவர்
- மாநகர செயலாளர் அல்லது உள்ளூராட்சி சபையின் செயலாளர் – பிரதித் தலைவர்
- நூலகர் - குழுச் செயலாளர்
- சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்
- உள்ளூராட்சிப் பகுதிக்குரிய பொது சுகாதார பரிசோதகர்
- அருகிலுள்ள பாடசாலை நூலகர்

## 03. நடைமுறைப்படுத்தக்கூடிய விசேடத் திட்டங்கள்

- இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி சரியான தகவல்களை அணுகுவதற்காக வாசகர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தொனிப்பொருள் தொடர்பான பல்வேறு வாசிப்புப் போட்டிகளை ஏற்பாடு செய்தல்.
- குறிப்பிட்ட அதிகார எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு வீடுகளிலும் வீட்டு நூலகத்தை ஆரம்பிப்பதற்கு ஏற்ற செயற்திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- இதுவரை நூலகத்துடன் இணையாத வாசகர்களைக் கண்டறிந்து அவர்களை இணைக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி நூலக அங்கத்துவம் வழங்குதல்.
- தகவல் கல்வியறிவு மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- வாசிப்புச் சமூகத்திற்காக வாசிப்பு தொடர்பான விசேட செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- நூலகங்களுக்கு இடையேயான கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.
- நூலக முகநூல் பக்கத்தின் (Facebook) ஊடாக நூலகத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்பாக பிரச்சாரம் செய்தல்.
- நூலகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைப் பற்றிய தகவல்களை இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் மூலம் பிரச்சாரம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நூலகத்தின் மூலம் நிகழ்நிலையில் வாசகர்களின் படைப்புகளை காட்சிப்படுத்த மன்றங்களை அமைத்தல்.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals) மற்றும் அவற்றை எவ்வாறு அடைவது என்பது பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சிறுவர்கள். விசேட தேவையுடையவர்களுக்காக வாசிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதுடன் சிறுவர் இல்லங்கள். முதியோர் இல்லங்கள். சிறைக் கைதிகள் தொடர்பில் நடமாடும் நூலகச் செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்.
- சமூகத்தின் இரசனையை அதிகரிக்க பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை செயல்படுத்துதல்.
- குறிப்பிட்ட அதிகார எல்லைக்குள் சிறந்த வாசகரைத் தெரிவு செய்தல்.
- வாசகர்களின் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை நூலகச் சுவர் செய்தித்தாள்/சஞ்சிகைகள் மூலம் முன்வைப்பதற்கான வாய்ப்பை வழங்குதல்.
- பிற ஆக்கப்பூர்வமான வாசிப்பு ஊக்குவிப்புச் செயற்திட்டங்களை நடத்துதல்.
- தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார் தகுதிகளுடன் தேவையான திறன்களைப் பெறும் இளைஞர்கள் மற்றும் பெரியவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- ஏனைய பொருத்தமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

**04. நிதி**

இதற்காக பாரியளவில் நிதியை உபயோகப்படுத்தத் தேவையில்லை. தேவைப்படும் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் நிதி மூலமோ அல்லது நூலகத்தின் நிதி மூலமோ பெற்றுக்கொள்ள முடியும்.

**05. அறிக்கை தயாரித்தல்.**

மேற்கொள்ளப்பட்ட சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக தெளிவான முறையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையினை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் **2025 பெப்ரவரி 28** ஆந் திகதிக்கு முன் **பிரிவுத் தலைவர், விரிவாக்கல் சேவைகள் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, இல 14, சுதந்திர வழி, கொழும்பு 07** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

வெற்றிபெறும் நூலகங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அடிப்படையாகக் கருதப்படும் அறிக்கையினைத் தயாரிக்கும் போது மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்கள் உட்பட வாசிப்பை ஊக்குவிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்டத் திட்டங்களுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும் முறை பின்பற்றப்படுகிறது. மொத்த புள்ளிகளில் 75% நூலகம் நடத்தும் வாசிப்பு ஊக்குவிப்புத் திட்டங்களுக்கும் 25% புள்ளிகள் பிற சமூகத் திட்டங்களுக்கும் வழங்கப்படுகிறது.

அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதன் வெளிப்புற அட்டை / புத்தகக் கட்டலிற்கு மேலதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடத் தேவையில்லை. நூலகத்தால் தேசிய வாசிப்பு மாத்தின் தொனிப்பொருளுக்கு அமைவாக செய்யப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் குறிப்பிட்ட வருடம் முழுவதும் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் தகவல்களை **தனித்தனியான புகைப்படங்களுடன் மற்றும் உறுதிப்படுத்தக்கூடிய ஏனைய ஆதாரங்களுடன் முன்வைத்தல்** போதுமானதாகும்.

**06. மதிப்பீடு**

தேசிய வாசிப்பு மாதம் 2024 இல் வினைத்திறன் மிக்க நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய நூலகங்களுக்கு 2025 ஆம் ஆண்டு இடம்பெறும் தேசிய வாசிப்பு மாதத்தின் தேசிய விழாவின் போது விருதுகளும் சான்றிதழும் வழங்கப்படும். **மதிப்பீட்டு நடவடிக்கைகள் நூலக மட்டங்களில் இடம்பெறுவதனால் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் உரிய பொது நூலகங்கள் மற்றும் கிளை நூலகங்கள் வெவ்வேறாக தங்களது அறிக்கைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.** வெற்றிபெறும் நூலகங்கள் மற்றும் பாராட்டப்படும் நூலகங்கள் தொடர்பில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் முடிவே இறுதி முடிவாகும்.

பேராசிரியர் நந்த தர்மரத்ன
தலைவர்

Professor Nanda Dharmarathna
Chairman
National Library and Documentation Services Board
14, Independence Avenue
Colombo 07

தொடர்புகளுக்கு :- தொலைபேசி இலக்கம் – 0112-688855, தொலைநகல் –011-2685201
மின்னஞ்சல் – libdev@mail.natlib.lk இணையத்தளம் - www.natlib.lk